**"கொழும்பிலுள்ள வசதிகளற்ற இளைஞர்களுக்கு உதைபந்து பயிற்சி முகாம்களை மீளவும் நடாத்துவதற்காக YKK மற்றும் Real Madrid Foundation ஆகியன ஒன்றிணைந்துள்ளன"**

*விளையாட்டுக்களின் மூலமாக சிறுவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன*

**கொழும்பு, இலங்கை, 26 ஆகஸ்ட் 2016:** YKK மீண்டும் ஒரு சிறுவர்களுக்காக உதைபந்து பயிற்சி முகாம்களை ஏற்பாடு செய்துள்ளது. இந்த வர்த்தக சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ் இம்முறை கொழும்பிலுள்ள சிறுவர்கள் பயனடையவுள்ளனர். 2016 ஆகஸ்ட் 26 முதல் 28 வரை இடம்பெறவுள்ள **YKK ASIA GROUP Kids Football Clinic** (AKFC) எனப்படுகின்ற இந்த பயிற்சி முகாமை ஏற்பாடு செய்வதற்காக YKK HOLDING ASIA PTE. LTD., (YHA), மற்றும் YKK LANKA (PVT) LTD ஆகியன மீண்டும் ஒரு முறை Real Madrid Foundation (RMF) உடன் ஒன்றிணைந்துள்ளன.

மூன்று தினங்களாக இடம்பெறவுள்ள இந்த பயிற்சி முகாமில், முதலாவது தினத்தன்று பி.ப 3 மணி முதல் குதிரைத்திடல் சர்வதேச ரக்பி மைதானத்தில் பயிற்சியாளர்களுக்கான முகாம் ஒன்றுடன் நிகழ்வு ஆரம்பிக்கப்படவுள்ளது. உள்நாட்டு உதைபந்தாட்ட சம்மேளனம் மற்றும் பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்படுகின்ற உள்நாட்டு பயிற்சியாளர்களுக்கு ரியல் மட்ரிட் கழகத்தின் பயிற்சி முறைமை மற்றும் நுட்பங்களை பகிர்ந்து கொள்வதற்காக திரு. Pablo Gomez Revenga, திரு. Javier Garcia Torres மற்றும் திரு. Jaime Torcal Cano ஆகிய பயிற்சியாளர்கள் Real Madrid Foundation இலிருந்து வரவழைக்கப்படவுள்ளனர். இரண்டாவது மற்றும் மூன்றாவது தினங்களில் உள்நாட்டு பயிற்சியாளர்களுக்கு நேரடி அனுபவங்கள் வழங்கப்பட்டு, சிறுவர்களுக்கான நான்கு பயிற்சி முகாம்களை நடாத்துவதற்காக Real Madrid Foundation இலிருந்து வருகை தரவுள்ள பயிற்சியாளர்களுக்கு உதவுவர். SOS Villages மற்றும் பதுளை பாடசாலை ஆகியவற்றிலிருந்து கலந்து கொள்ளும் சிறுவர்களுக்கு அவர்கள் கூட்டாக பயிற்சி அளிக்கவுள்ளனர்.

பரந்தளவில் சமூகத்திற்கு அர்த்தமுள்ள வழியில் பங்களிப்புச் செய்யவேண்டும் என்பதற்காக YHA முன்னெடுத்துவருகின்ற முயற்சிகளின் ஒரு பகுதியாக, விளையாட்டு சார்ந்த செயற்பாடுகள் மூலமாக சிறுவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சியை ஊக்குவிக்கும் இலக்கு 2006 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அன்றுதொட்டு, AKFC ஆனது YKK ASIA GROUP இன் பிராந்திய வர்த்தக சமூகப் பொறுப்புணர்வு தொடர்பான பிரதான நிகழ்வாக மாறியுள்ளதுடன், பங்களாதேஷ், கம்போடியா, இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தென்கொரியா, இலங்கை, தாய்லாந்து மற்றும் வியட்னாம் போன்ற நாடுகளில் இடம்பெற்று வருகின்றது.

YHA இன் தலைமை அதிகாரியான திரு. Kosuke Miimi அவர்கள் கூறுகையில், *"இந்த AKFC ஆனது சிறுவர்களுக்கு நற்பலனளிப்பது மட்டுமன்றி, சமூகத்திற்கும் பயனளிக்கும் ஒரு உள்ளார்ந்த செயற்திட்டமாகும். விளையாட்டுகளுக்கான வாய்ப்பை வழமையாக குறைவாகக் கொண்டுள்ளவர்களுக்கு இது வாய்ப்பளிப்பதுடன், சமூகத்தின் மத்தியில் உதைபந்தாட்டம் மீதான ஆர்வத்தையும் அதிகரிக்கச் செய்கின்றது."*

*"புலமைப்பரிசில்கள், வைத்தியசாலைகளின் புனரமைப்பு பணிகள், தொழில்நுட்ப கல்லூரிகளுக்கு உதவுதல், மரம் நடுகைத் திட்டங்கள் என பல்வேறு வர்த்தக சமூக பொறுப்புணர்வுச் செயற்பாடுகளை YKK முன்னெடுத்து வருகின்றது. ஒரு சர்வதேச "உள்நாட்டு நிறுவனம்" என்ற வகையில் இலங்கை சமுதாயத்திற்கு தொடர்ச்சியாக பங்களிக்க வேண்டும் என்ற எமது அர்ப்பணிப்புடனான ஈடுபாட்டை இந்த உதைபந்து பயிற்சி முகாம் மேலும் வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது,"* என்று YKK Lanka (PVT) LTD நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், தொழிற்சாலைப் பணிப்பாளருமான திரு. Ryohei Nagahata அவர்கள் குறிப்பிட்டார்.

YKK முன்னெடுத்துவருகின்ற முயற்சிகளின் காரணமாக Real Madrid Foundation இன் ஸ்பானிய உதைபந்து பயிற்றுவிப்பாளர்களிடம் நேரடியாக பயிற்சிகளைப் பெறும் வாய்ப்பு பல்லாயிரக்கணக்கான வசதியற்ற சிறுவர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இச்சிறுவர்களில் சிலர் தொழில்முறை பயிற்றுவிப்பாளர்களின் கீழ் உதைபந்தாட்ட பயிற்சியைப் பெற்று விளையாடுவதற்கு தமது வாழ்நாளிலேயே அரிதாக கிடைக்கும் வாய்ப்பையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இதில் பங்குபற்றும் அனைவருக்கும் YKK/Real Madrid Foundation வழங்கும் பூரண சீருடைத் தொகுதியொன்றும் (மேற்சட்டை, காற்சட்டை மற்றும் காலுறைகள் அடங்கலாக), உதைபந்தாட்ட காலணிகள், பங்குபற்றியமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ் மற்றும் மேலும் பல கவரும் நானாவித பொருட்களும் வழங்கப்படும். உள்நாட்டில் உதைபந்தாட்டத்தின் மீதான ஆர்வத்தை தொடர்ச்சியாக பேணுவதை ஊக்குவிக்கும் வகையில், பங்குபற்றும் சமூகங்களுக்கு நிகழ்வில் வைத்து உதைபந்துகள் மற்றும் பயிற்சி உபகரணங்களையும் நன்கொடையாக வழங்குவதற்கு YKK திட்டமிட்டுள்ளது.

வாழ்நாளில் அரிதாகக் கிடைக்கின்ற இத்தகைய நிகழ்வில் பங்குபற்றும் சிறுவர்களின் வாழ்வில் நற்பயனை ஏற்படுத்துவதற்கு இந்த முயற்சிகள் ஏதோ ஒரு வகையில் பங்களிப்பாக அமையவேண்டும் என்பதே YKK இன் அபிலாஷை.

**மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்:**

**வெகுசன தொடர்பு முகவர் நிறுவனம்:** Hype Corporate Communication Solutions
**பெயர்:** Ms. மிஹிரி விக்கிரமநாயக்க
**பதவி:** பணிப்பாளர் - வெகுசன தொடர்புகள்
**தொலைபேசி:** +94-777 354051
**மின்னஞ்சல்:** Mihiri@hype.lk